தினமணி

"கோமுகி அணை பாசன விவசாயிகளுக்கு மானியம்'

First Published : 24 Feb 2011 12:00:00 AM IST

Last Updated :



விருத்தாசலத்தை அடுத்த காணாதுகண்டான் கிராமத்தில் நடவு செய்யப்பட்டுள்ள துல்லியப்பண்ணைத் திட்ட கரும்பு வயல்.

விருத்தாசலம்: கோமுகி அனண பாசனப் பகுதி விவசாயிகளுக்கு துல்லியப் பண்ணைத் திட்டத்தில் கரும்பு, வாழை, மஞ்சள் நடவுக்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது.

இதுகுறித்து வேளாண்மை நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் அருட்செந்தில் தெரிவித்தது:

தமிழகத்தில் 63 ஆற்றுப்படுகை பகுதிகள் உள்ளன. இப்பாசனப் பகுதிகளில் வேளாண்மை உற்பத்தியை தீவிரப்படுத்த உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு நீர்வள நிலவளத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அதன்படி விழுப்புரம், கடலூர் மாவட்டத்தில் உள்ள கோமுகி அணையும் ஒன்றாகும். இதில் கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சின்னசேலம், நல்லூர், மங்களூர் உள்ளிட்ட பல்வேறு பகுகளை உள்ளடக்கிய 80-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இந்த கோமுகி அணை பாசனப் பகுதி உள்ளது.

கோமுகி அணை நீரை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு அரசு பல்வேறு மானியங்களை வழங்கி வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்து வருகிறது. அதன்கீழ் இப்பகுதிகளில் துல்லியப் பண்ணைத் திட்டத்தில் கரும்பு, வாழை, மஞ்சள் பயிரிடும் விவசாயிகளுக்கு 65 சதவிகிதம் மானியம் வழங்குகிறது. இதில் சொட்டுநீர் குழாய்க்கான கருவிகள், கரையும் உரங்கள், திசு வாழை கன்றுகள், விதை மஞ்சள், கரும்புக்கு உயிர் உரங்கள், சூப்பர் பாஸ்பேட் உள்ளிட்ட பொருள்கள் மானியத்தில் அடங்கும்.

கரும்பு நடவில் சொட்டுநீர் பாசன அமைப்பு: இன்லைன் எனப்படும் உட்குழாய் சொட்டு நீர்பாசன அமைப்பு கரும்பு பயறுக்கு சிறப்பாக இருக்கும். தற்போது 5.5 பார் அமைத்து நடும்

முறை அறிமுகப்படுத்தப்பட்டுவருகிறது. இதற்கு ஏற்றவாறு சொட்டுநீர் குழாய் பூமிக்கு அடியில் 15 செ.மீ. ஆழத்தில் அமைக்க வேண்டும்.

குழி நடவு முறையில் 8 மி.மீ. சிறு நுண்நீர் குழாய்களின் மீது ஆன்லைன் சொட்டுவான்கள் பொருத்தப்பட்டு உபயோகிக்க வேண்டும். இதில் ஒவ்வொரு குழியும் ஆன்லைன் சொட்டுவான்களை கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு கரும்பில் சொட்டுநீர் முறையை பயன்படுத்துவதன் மூலம் தண்ணீர் சிக்கனம் ஏற்படுகிறது.

மேலும் கரையும் உரங்களை சொட்டுநீர் பாசனம் மூலம் அனுப்புவதால் உரங்கள் வீணாகாமல் நேரடியாக பயறுகளுக்கு சென்று மகசூல் அதிகமாக கிடைக்கிறது. இதன் மூலம் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம்.

வாழை நடவு: திசு வளர்ப்பு வாழையில் இரண்டாம் நிலை கடினப்படுத்தப்பட்ட வாழை செடிகள் நடவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பாலிதீன் பைகளை பிரித்து செடிகளை கவனமாக மண்கட்டியுடன் எடுத்து குழியின் நடுவில் வேர்களை தொந்தரவு செய்யாமல் நடவு செய்ய வேண்டும். செடிகளை நட்டபின் அதைச் சுற்றுயுள்ள மண்ணை நன்றாக அழுத்திவிட வேண்டும். திசு வளர்ப்பு வாழை நடும்போது வாழையைச் சுற்றி அடியில் வேர்களை மூடியுள்ள மண்கட்டியை உடைக்காமல் நடவு செய்வது முக்கியமாகும்.

சொட்டுநீர் பாசனமுறை: வாழையில் இன்லைன் மற்றும் ஆன்லைன் சொட்டுநீர்க் குழாய்கள் மூலம் தேவையான இடைவெளிவிட்டு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். ஆன்லைன் முறையில் செடிக்கு இரண்டு சொட்டுவான்களும், இன்லைன் சொட்டுநீர் முறையில் சொட்டுவான் தேவையான இடைவெளிவிட்டு வரிசையாகவும் அமைக்கப்படவேண்டும்.

உரமிடும்முறை: திசு வளர்ப்பு முறையில் வளர்க்கப்படும் வாழையில் சொட்டுநீர் பாசனம் மற்றும் உரப்பாசத்தினால் உயர்தொழில்நுட்ப முறையில் வளர்க்கப்படுகிறது. எனவே சொட்டுநீர் பாசன முறையில் செடி நடவு செய்த 5-வது நாள் முதல் அறுவடை செய்யும் 300-வது நாள் வரை உரப்பாசனம் செய்ய வேண்டும்.

துல்லியப் பண்ணைத் திட்டத்தில் கரும்பு 30 ஹெக்டேர் அளவிலும், வாழை 10 ஹெக்டேர் அளவிலும், மஞ்சள் 15 ஹெக்டேர் அளவிலும் கோமுகி அணை பாசனப் பகுதிகள் நடவு செய்ய அரசு விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்களை வழங்கி வருகிறது. கோமுகி அணை பாசனப்பகுதி விவசாயிகள் உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பயனடையலாம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி மற்றும் கைப்பேசி எண்கள்: 04143-238353, 9047376440.

"கறிவேப்பிலை சாகுபடி கஷ்டமில்லா வருமானம்'

First Published : 24 Feb 2011 12:00:00 AM IST



திருவள்ளூர்: அதிக மருத்துவக் குணங்களும், அதிக லாபமும் தரும் கறிவேப்பிலை சாகுபடியில் ஒரே ஆண்டில் ஆறு முறை அறுவடை செய்து விவசாயிகள் அதிக லாபம் ஈட்ட முடியும்.

தென்னிந்திய சமையலில் அதிகளவில் இடம் பெறுவது கறிவேப்பிலை. கடந்த சில மாதங்களுக்கு முன் ஒரு கொத்து 50 காசுக்கு விற்கப்பட்டு வந்த கறிவேப்பிலை தற்போது 2 ரூபாய் வரை விற்கப்படும் அளவிற்கு மவுசு கூடியுள்ளது. மருத்துவக் குணத்தின் காரணமாக கறிவேப்பிலைப் பொடி பெருமளவு அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மருத்துவ குணங்கள்: அஜீரணம், வயிற்றுப்போக்கு, இளநரை, முடியின் வேர்கள் வலுப்படுத்துல் ஆகியவற்றுக்கு கறிவேப்பிலை உதவுகிறது. மேலும் கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின்-சி உயிர்சத்தும் உள்ளது.

செங்காம்பு, தார்வாட் 1, தார்வாட் 2 ஆகிய ரக கறிவேப்பிலை தற்போது சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கறிவேப்பிலை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து தோட்டக்கலைத் துறை தெரிவித்த தகவல்கள்:

மண் வகை: மணல் கலந்த செம்மண். வண்டல் மண் மற்றும் நல்ல வடிகால் வசதியுள்ள மண்.

நடவு முறை: பெரிய செடிகளாக வளர்க்க 2.5 மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். குத்துச் செடிகளாக வளர்க்க 1.2 மீ இடைவெளி வேண்டும்.

அதிக மகசூல் பெற 60 செ.மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இம்முறையில் நடவு செய்தால் 45 முதல் 60 நாள்களுக்கு ஒரு முறை அறுவடை செய்ய முடியும். பூமியில் இருந்து 10 செ.மீ. உயரம் விட்டு அறுவடை செய்ய வேண்டும்.

உரமிடுதல்: அடிவுரம் 1 அடி ஆழத்தில் சதுர குழித் தோண்டி நாற்றுகளைச் சுற்றி மக்கிய தொழுவுரம் இடவேண்டும். பின்னர் உரத்தை மண்ணுடன் சேர்த்து கிளறி விட வேண்டும். நட்டவுடன் ஒரு முறையும், மூன்றாம் நாள் ஒரு முறையும், பின்னர் வாரம் ஒருமுறையும் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

மேலுரம்: ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னரும் ஒரு செடிக்கு 20 கிலோ தொழுவுரத்தை இட்டு கொத்தி விடவேண்டும்.

பயிர் பாதுகாப்பு: கறிவேப்பிலையைத் தாக்கும் நோய் இலைப்புள்ளி நோயாகும். இதில் இருந்து பாதுகாக்க கார்பன்டைசிம் என்ற பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அளவு கலந்து செடிகள் முழுவதும் நனையும் வரை தெளிக்க வேண்டும்.

அறுவடை மற்றும் மகசூல்: நடவு செய்யும் முறையைப் பொறுத்து மகசூல் மாறுபடும். 60 செ.மீ. இடைவெளியில் நடவு செய்தால் முதலில் 6 முதல் 9 மாதத்தில் முதல் அறுவடை செய்யலாம். தொடர்ந்து 45 முதல் 60 நாள்களில் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 2000 கிலோ வரை அறுவடை செய்ய முடியும்.

தற்போது கறிவேப்பிலை ஒரு கிலோ ரூ.30 முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இன்னும் விசேஷ நாள்களில் கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது.

மருத்துவக் குணங்களுக்காக சாகுபடி செய்யும் கறிவேப்பிலை ரகங்களுக்கு தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் இதுகுறித்த விவரங்களுக்கு உதவி தோட்டக்கலை அலுவலர் பாபு என்பவரை 9444227095 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விவசாயிகள் பயனடையலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**தமிழகம், புதுவையில் மழை தொடரும்**

First Published : 24 Feb 2011 01:02:56 AM IST

சென்னை, பிப். 23: தமிழகம், புதுவையில் சில இடங்களில் வியாழக்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்று மண்டலத்தின் உயர் அடுக்குகளில் மேகக் கூட்டங்களில் ஏற்பட்டுள்ள சுழற்சி காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்துக்கு ஒரு சில இடங்களில்

இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும். கடலோர ஆந்திரம், கேரளம், லட்சத்தீவுகளிலும் ஒரு சில இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

பரவலாக கன மழை: கோடை காலம் தொடங்க உள்ள நிலையில், கடந்த 2 நாள்களாகத் தொடர்ந்து பரவலாக கன மழை பெய்கிறது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக திண்டுக்கல்லில் 170 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக குன்னூரில் 130 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

மாநிலம் முழுவதும் புதன்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): சீர்காழி, ஆரணி 90.

செங்கல்பட்டு, அருப்புக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், திருவாலங்காடு, செம்பரம்பாக்கம், புழல், திருத்தணி சேத்தியாதோப்பு, மதுக்கூர், பட்டுக்கோட்டை, வந்தவாசி, அரக்கோணம், மேல ஆலத்தூர், கோத்தகிரி, குந்தாபாலம் 50.

காஞ்சிபுரம், சோழவரம், பரங்கிப்பேட்டை, தென்காசி, திருச்சுழி 40.

பொன்னேரி, சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், ஓரத்தநாடு, ஆலங்குடி, செங்கோட்டை, நாமக்கல், கேத்தி, போடிநாயக்கனூர், பெரியகுளம், சாத்தூர், கொடைக்கானல் 30.

செய்யூர், மாமல்லபுரம், பூந்தமல்லி, பூண்டி, காட்டுமன்னார்கோவில், விருத்தாச்சலம், காரைக்கால், அதிராமபட்டினம், கொள்ளிடம், தரங்கம்பாடி, மயிலாடுதுறை, ஆயிக்குடி, பேச்சிப்பாறை, ஒகனேக்கல், சேலம், மேட்டூர் அணை, சோழவந்தான், மானாமதுரை 20.

திருவள்ளூர், தாமரைப்பாக்கம், திருவையாறு, நன்னிலம், நாகப்பட்டினம்,வேதாரண்யம், திருமயம், சங்கரன்கோவில், குழித்துறை, குடியாத்தம், காவேரிப்பாக்கம், வாலாஜாபேட்டை, கிருஷ்ணகிரி, சேந்தமங்கலம், பவானி, ஊட்டி, சிட்டம்பட்டி, மேலூர், மேட்டுப்பட்டி, பெரியார் அணை, தேவகோட்டை, திருப்புவனம், சிவகங்கை, ராஜபாளையம், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, விருதுநகர் 10.

குடிநீர் ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் மழை: சென்னைக்குக் குடிநீர் வழங்கும் புழல், பூண்டி, செம்பரம்பாக்கம், தாமரைப்பாக்கம், சோழவரம் உள்ளிட்ட ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பலத்த மழை பெய்துள்ளது.

சென்னையில் 80 மில்லி மீட்டர் மழை: சென்னையில் புதன்கிழமை அதிகாலையில் பல்வேறு இடங்களில் பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் நகரில் 80 மில்லிமீட்டர் அளவுக்கு மழை பதிவாகியுள்ளது.

நகரில் வியாழக்கிழமை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பூதப்பாண்டியில் 70.6 மி.மீ. மழை**

First Published : 23 Feb 2011 10:47:18 AM IST

நாகர்கோவில், பிப். 22: கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டியில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 70.6 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

மாவட்டத்திலுள்ள அணைப் பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை- 50.4, பெருஞ்சாணி- 10.6, சிற்றாறு 1- 8, சிற்றாறு 2- 6, ஆனைக்கிடங்கு- 11.4, அடையாமடை- 4, புத்தன்அணை- 10.6, சுருளோடு- 57.5, கன்னிமார்- 15.2, ஆரல்வாய்மொழி- 2.2.

பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 569 கனஅடி, பெருஞ்சாணி அணைக்கு 128 கனஅடி, சிற்றாறு 1 அணைக்கு 31 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பேச்சிப்பாறை

அணையிலிருந்து 608 கனஅடி, பெருஞ்சாணி அணையிலிருந்து 450 கனஅடி, சிற்றாறு 1 அணையிலிருந்து 200 கனஅடி தண்ணீர் பாசனத்துக்காக திறந்துவிடப்பட்டிருந்தது.

**சிறப்பு காய்கறி விற்பனை மையங்கள் திறக்க வலியுறுத்தல்**

First Published : 23 Feb 2011 02:52:56 PM IST

மதுரை, பிப். 22: மதுரை கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்குள் அனுப்பானடி உள்ளிட்ட பகுதிகளில் நெசவாளர்கள், பட்டறைத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில், மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பு காய்கறி விற்பனை மையங்கள் அமைக்க வேண்டும் என, அத்தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. என்.நன்மாறன் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

மதுரை கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் 53-வது வார்டு அனுப்பானடி, 52-வது வார்டு கேட்லாக் ரோடு, 45-வது வார்டு மாகாளிப்பட்டி ஆகிய 3 பகுதிகளில், கூட்டுறவுத்துறை மூலம் விற்பனை செய்யப்படும் சிறப்புக் காய்கறி விற்பனை மையங்களைத் திறக்க ஆட்சியர் சி.காமராஜிடம் மனு அளித்தேன்.

இதுதொடர்பாக நான் குறிப்பிட்டிருந்த 3 இடங்களையும் ஆய்வு செய்து, அனுப்பானடி பகுதியில் மட்டுமே காய்கறி விற்பனை மையம் திறக்க வாய்ப்புள்ளது. பிற பகுதிகளில் மக்கள் அதிகம் குடியிருக்கவில்லை என, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளரிடம் நான் கேட்டபோது, இதுபோன்ற தகவலே தனக்குத் தெரியாது என்றார்.

மதுரையில் அனுப்பானடி, கேட்லாக் ரோடு மற்றும் மாகாளிபட்டி ஆகிய பகுதிகள் நெசவாளர்கள், சில்வர் பட்டறைத் தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள். மதுரையில் தற்போது 20 இடங்களுக்கும் மேல், இந்த வகையான காய்கறி விற்பனை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த பகுதிகள் அனைத்தும் அரசு ஊழியர்கள், ஓய்வு பெற்ற அதிகாரிகள் அதிகம் வசிக்கும் பகுதிகள்.

எனவே, ஆட்சியர் சி.காமராஜ் முயற்சி எடுத்து அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையிலும் நான் குறிப்பிட்ட 3 பகுதிகளிலும் சிறப்புக் காய்கறி விற்பனை மையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த மூன்று பகுதிகளிலும், சட்டப்பேரவை உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட காய்கறி அங்காடிக்கான கட்டடம் ஏற்கெனவே உள்ளது. அந்த கட்டடங்களிலேயே இந்த மையங்களை திறக்க வலியுறுத்தி உள்ளேன் என்றார்.

**வெம்பாக்கம் வட்டாரத்தில் விதை கிராம திட்ட பயிற்சி**

First Published : 23 Feb 2011 11:33:43 AM IST

செய்யாறு,பிப்.22: செய்யாறை அடுத்த வெம்பாக்கம் வட்டாரத்தில் விதை கிராம திட்ட பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி வகுப்பில் திருவண்ணாமலை விதைச்சான்று உதவி இயக்குநர் பேபிபர்வதம் கலந்து கொண்டு விதைச் சான்று நடவடிக்கைகள், சான்று விதை தரத்தைப் பற்றியும் நெல், மணிலா, பயறு வகை பயிர்களுக்கு சாகுபடி மற்றும் இதர விதைசான்றுகள் குறித்து பேசினார்.

விதைச்சான்று அலுவலர் குமரன் விதைச்சான்றுத் திட்டத்தைப் பற்றி தெரிவித்தார்.

வெம்பாக்கம் வேளாண்மை உதவி இயக்குநர் கோ.பாண்டியன் பயிர் சாகுபடி முறைகள் திட்டப்பணிகள் குறித்து செயல் விளக்கமளித்தார்.

வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரம்மதேசம், சித்தாத்தூர், பெருமாந்தாங்கல், சுமங்கலி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்கராசு, புகழேந்தி, குப்பன்,இராஜ்குமார உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

**பயிர் சாகுபடியில் லாபத்தை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணையம் அவசியம்**

First Published : 23 Feb 2011 01:31:24 PM IST

ஆலங்குடி, பிப். 22: மானாவாரி பயிர் சாகுபடியில் நிகர லாபத்தை அதிகரிக்க சாகுபடியோடு ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மானாவாரி விவசாயத்துக்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் திங்கள்கிழமை விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இந்தப் பயிற்சி வகுப்பில் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் முனைவர் ப. சின்னையன் பேசியது:

தற்போதைய காலகட்டத்தில் மானாவாரி விவசாயம் லாபகரமாக இருப்பதில்லை. அதிலும், விவசாயப் பயிர்களை மட்டும் சாகுபடி செய்யும் போது உற்பத்தி செலவினங்கள் அதிகரிப்பதைத் தவிர்க்க இயலவில்லை. இதன் காரணமாக விளைச்சல் எவ்வளவு அதிகரித்தாலும் நிகர லாபம் அதிகரிப்பதில்லை.

இத்தகைய மானாவாரி விவசாயத்தைப் பொருளாதார ரீதியாக வலுவானதாகவும், தொடர்ந்து நிலைப்புத் தன்மை உடையதாகவும் மாற்றிக் கொள்ள சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதன்படி, மானாவாரி விவசாயத்தை பல்வேறு அங்கங்களாகப் பிரித்து அனைத்து அங்கங்களையும் செயல்படுத்துவதோடு, விவசாயம் சார்ந்த தொழில்களான கால்நடை, ஆடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பறவைகள் வளர்ப்பு, காளான் குடில்கள் அமைத்தல், தேனீ வளர்ப்பு, மரம் வளர்ப்பு, தீவனப் பயிர்கள் வளர்ப்பு முதலான பிற தொழில்களையும் ஒரே பண்ணையில் பராமரிக்கக் கூடிய ஒருங்கிணைந்த பண்ணையத்தைப் பராமரிப்பது அவசியம்.

இதன்மூலம், மானாவாரி விவசாயத்தில் கிராமப்புற மக்களின் உணவு, ஊட்டச்சத்து தேவையைப் பெருமளவு தன்னிறைவு அடையச் செய்ய முடியும் என்றார் அவர்.

பயிற்சி வகுப்புக்கு தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையப் பேராசிரியர் முனைவர் பாக்கியராஜ் தலைமை வகித்தார்.

மதுரை மண்டல வன விரிவாக்க அலுவலர் ராஜசேகரன், புதுக்கோட்டை கால்நடை பல்கலைக்கழகத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையத் தலைவர் ரிச்சர்டு ஜெகதீசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

புதுக்கோட்டை கால்நடை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலைய மீன் வளத் துறை உதவிப் பேராசிரியர் விஜய் அமிர்தராஜ், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் செ.க. நடராஜன், முனைவர் சு. குருநாதன் உள்ளிட்டோர் பேசினர்.

விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில் விவசாயப் பிரதிநிதிகள் 30 பேர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்லில் மழைபெய்ய வாய்ப்பு: வானிலை ஆலோசனை மையம் அறிவிப்பு**

First Published : 23 Feb 2011 11:03:35 AM IST

நாமக்கல், பிப். 22: நாமக்கல் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

÷இது குறித்து அம் மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி: அடுத்த மூன்று நாள்களுக்கு வானில் காற்று சுழற்சியால் மேகமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ்ô்கவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 டிகிரி செல்சியஸ்ô்கவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. காற்றின் ஈரப்பதம் 49 சதவீதத்தில் இருந்து 86 சதவீதம் வரை மாறுபடும்.

÷பகல் மற்றும் இரவில் வெப்ப அளவு அதிகரித்து காணப்படுவதால், கோழிகளில் தீவன எடுப்பு குறையும். கோடை காலத்தின் தொடக்கத்தில் காணப்படும் அறிகுறிகளான முட்டை ஓட்டின் தரம் குறைதல், கோழிகளின் இறப்பு ஆகியவை நிகழ வாய்ப்புள்ளது. கோழிகளின் மீது தெளிக்கப்படும் நீர் செல்லும் குழாய்கள் சூடாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

÷விவசாயிகளுக்கான ஆலோசனை: நாமக்கல் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதால், சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு நீர்ப் பாசனம் செய்வதை தவிர்க்கலாம். மழை அளவுக்கேற்ப மேல் உரம் இடலாம்.

÷மரவள்ளியில் மாவுப் பூச்சி தாக்குதல் அதிகமாகக் காணப்படுகிறது. இந்தப் பூச்சிகளால் பாதிக்கப்பட்ட செடியின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடுகிறது. பூச்சிகளைக் கட்டப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் புரொப்பனோபாஸ் 20 மி.லி. கலந்து 15 நாள்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

**தேங்காய் பருப்பு விலை படிப்படியாக சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,01:17 IST

கோபிசெட்டிபாளையம்: எண்ணெய் மார்க்கெட்டில் விலை தொடர்ந்து குறைந்து வருவதால் தேங்காய் பருப்பு கொள்முதல் திடீரென குறைந்துள்ளது. தேங்காய் பருப்பு விலை படிப்படியாக குறைந்து வருகிறது.

சென்றாண்டு துவக்கத்தில் 30 ரூபாயை தாண்டிய தேங்காய் பருப்பு, மழை மற்றும் கடுங்குளிர் காரணமாக ஆண்டு இறுதியில் 60 ரூபாயை தொட்டது. விவசாயிகள் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்தனர். விவசாயிகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதை போல, 9ம் தேதி ஒரு கிலோ தேங்காய் பருப்பு 70 ரூபாயை தொட்டது. எண்ணெய் மார்கெட்டில் தற்போது, 15.5 லிட்டர் தேங்காய் எண்ணெய் விலை 30 ரூபாய் வரை குறைந்துள்ளது. மூலப்பொருளான தேங்காய் பருப்பை கொள்முதல் செய்வதில் ஆலை அதிபர்கள் மற்றும் வியாபாரிகள் ஆர்வம் காட்டவில்லை. தேங்காய் பருப்புக்கு கடந்த இரண்டு வாரமாக விலை குறைய ஆரம்பித்தது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நடப்பு வாரம் 210 தேங்காய் பருப்பு மூட்டை ஏலத்துக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோவுக்கு 66.61 ரூபாய், குறைந்தபட்சமாக 64.31 ரூபாய், சராசரியாக 65.76 ரூபாய்க்கு ஏலம் போனது. 9ம் தேதி 70.59 ரூபாய், 16ம் தேதி 3.83 ரூபாய் குறைந்து 66.76 ரூபாய்க்கு விலை போனது. நடப்பு வாரம் மேலும் கிலோவுக்கு 15 பைசா வரை

குறைந்தது. தேங்காய் பருப்பு விலை படிப்படியாக குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

**வெள்ளரி பிஞ்சு வரத்து துவக்கம் போட்டி போட்டு வாங்கும் மக்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,01:20 IST

நாமக்கல்: கோடை வெயிலுக்கு இதமளிக்கக் கூடிய வெள்ளரி, தற்போது விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. விலை அதிகமாக இருந்தபோதிலும், அவற்றை மக்கள் போட்டி போட்டு வாங்கிச் செல்கின்றனர். கோடை வெயில் தாக்கத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் வகையில், பழரசம், தர்பூசணி, வெள்ளரி பிஞ்சு போன்றவற்றை மக்கள் அதிகம் நாடுவர். இந்தாண்டு கோடை காலம் ஆரம்பமாக உள்ளது. தற்போதே, வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. அதனால், மக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். அவ்வாறு தவிக்கும் மக்களை காக்கும் வகையில், சில வாரங்களுக்கு முன் தர்ப்பூசணி விற்பனைக்கு வரத்துவங்கியது. அதுபோல், வெள்ளரியும் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. நாமக்கல், சேலம் மாவட்டம் முழுவதும் விளையும் வெள்ளரி பிஞ்சை, வியாபாரிகள் வாங்கி வந்து, விற்பனை செய்யத் துவங்கியுள்ளனர். வெள்ளரி சீஸன் ஆரம்பம் என்பதால், அதன் விலை அதிகமாக உள்ளது. எனினும், அவற்றை பொருட்படுத்தாமல், வெள்ளரியை மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். இது குறித்து வெள்ளரி வியாபாரிகள் சிலர் கூறுகையில், ""வெள்ளரி சீஸன் துவக்கம் என்பதால், வரத்து சுமாராக உள்ளது. வெள்ளரியை மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். குறைந்தபட்சம் ஒரு வெள்ளரி 5 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது,'' என்றார்.

**அறுவடை நேரத்தில் பெய்த மழையால் விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,00:14 IST

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் பெய்த திடீர் மழையால் பெல்லாரி, புகையிலை அறுவடை செய்து வரும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டன்சத்திரம், காளாஞ்சிபட்டி, அத்திக்கோம்பை, சாலைப்புதூர், வெரியப்பூர் உள்ளிட்ட கிராமங்களில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடப்பட்டிருந்த பெல்லாரி, புகையிலை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. பல இடங்களில் விவசாயிகள் புகையிலை செடியை வெட்டி நிலத்திலேயே காயவைத்துள்ளனர். இதேபோல் பல இடங்களில் பெல்லாரியை பறித்து கொட்டி வைத்துள்ளனர்.
இந்நிலையில் நேற்று காலை, நேற்று முன்தினம் மாலை திடீரென்று இப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் காயவைக்கப்பட்டிருந்த புகையிலை மழைநீரில் நனைந்து சேதமடைந்தது.

பறித்த வெங்காயத்தை தார்பாய் போட்டு மூடி வைத்தனர். இதனால் அறுவடை செய்யும் பணி பாதிக்கப்பட்டது. பறிக்கப்படாமல் உள்ள பெல்லாரி செடிகளிலேயே அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயி கதிரொளி கூறியதாவது: அறுவடை சமயத்தில் எதிர்பாராமல் மழை பெய்துள்ளது. பொதுவாக மழையை விவசாயிகள் வரவேற்ற போதிலும் அறுவடை சமயத்தில் பெய்ததால் பெல்லாரி நட்ட விவசாயிகள் மிகவும் பாதிப்பு அடைந்துள்ளனர் என்றார்.

**குறையுது காய்கறி விலை: நுகர்வோர் நிம்மதி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,01:11 IST

சிவகங்கை : வரத்து அதிகரித்துள்ளதால், சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி விலை குறைந்துள்ளது.

சந்தை நிலவரம் (கிலோ): வெண்டைக்காய் -20; 24 க்கு விற்ற பாகற்காய்-20; முருங்கை பீன்ஸ்-40; கேரட்-30; முள்ளங்கி-15; கத்தரிக்காய்-20; 20 க்கு விற்ற உருளை கிழங்கு-15; 20 க்கு விற்ற முட்டை கோஸ்-15; தக்காளி -10; கருணை கிழங்கு- 30; இஞ்சி-30, அதில் இரண்டாவது ரகம் -25; 30 க்கு விற்ற அவரைக்காய்- 20; பட்டர் பீன்ஸ்-80; வெங்காயம்-40; பெல்லாரி-20; காலி பிளவர்-20; சேணை கிழங்கு-30; சேம்பு- 30; 20 க்கு விற்ற பச்சை மிளகாய்- 15; பீட்ரூட்- 24; 26க்கு விற்ற நூக்கல் -30; சோயாபீன்ஸ் -60; எலுமிச்சை- 25; பீர்க்கை -30; டர்னிப்-30; சீனி அவரை-10; சவ்சவ் -15; மல்லித்தழை- 20; பூசணி- 20 ரூபாய். வெங்காயம் அதிக வரத்து இருந்தும், விலை குறையவில்லை.

**சூலூரில் விவசாய கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,23:03 IST

கோவை : காய்கறி மற்றும் வாசனைப் பயிர்களில் துல்லிய பண்ணை திட்டம் செயல்படுத்துவது குறித்த நவீன தொழில்நுட்ப கருத்தரங்கு சூலூரில் வரும் 27,28 தேதிகளில் நடக்க உள்ளது.இதுகுறித்து தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் அறிக்கை:துல்லிய பண்ணை திட் டம் செயல்படுத்துவது குறித்த உயரிய தொழில் நுட்ப கருத்தரங்கு சூலூரில் உள்ள ஆர்.வி.எஸ்., குமரன் திருமண மஹாலில் வரும் 27, 28 தேதிகளில்

நடக்க உள்ளது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் விதை சான்றளிப்புத்துறை பங் கேற்கின்றன. இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவுப்பூச்சியை ஒழிக்க எளிய வழி:வேளாண் பல்கலை யோசனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,23:05 IST

கோவை : ""ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கையாண்டால் மாவுப்பூச்சியை ஒழிக்கலாம்,'' என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.
இயற்கை சார்ந்த வளங்குன்றா பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த பயிற்சி முகாம், வேளாண் பல்கலையில் கடந்த 17ம் தேதி துவங்கியது; வரும் மார்ச் 9ல் முடிவடைகிறது.
இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன், 21 நாட்கள் இப்பயிற்சி முகாம் நடக்கிறது. பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி துவக்கி வைத்து பேசியதாவது:
ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு என்பது, கடந்த 40 ஆண்டுகளாக தமிழக விவசாயிகளால் சிறப்பாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனால், பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு குறைந்து, பூச்சிகள் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் அதிகம் கடைபிடிக்கப்படுவதால் கர்நாடகம், ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் நிகழும் விவசாயிகள் தற்கொலை இங்கு இல்லை.
இயற்கை சார்ந்த வளங்குன்றா பயிர்ப் பாதுகாப்பில், உயிரியியல் மற்றும் தாவரப் பூச்சிக் கொல்லிகள், பூச்சிகளின் வளர்ச்சியை பாதிக்கும் ஹார்மோன்கள், நொதிகள், இனக் கவர்ச்சிப் பொறிகள், சோப்பு, எண்ணெய் போன்றவை பயன்படுத் தப்படுகின்றன.
தமிழகத்தின் அதிக நிலப்பரப்பு பாசன பகுதிகளாக மாறியதாலும், இரண்டு மற்றும் மூன்று போக சாகுபடி செய்யப்படுவதாலும், உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடப்படுவதாலும் பூச்சிகளும்,நோய்களும் பயிர்களை அதிகம் தாக்குகின்றன. இதை கட்டுப்படுத்த ரசாயன பூச்சிக் கொல்லிகள் துவக்கத்தில் பயன்படுத்தப்பட்டன.
இந்திய அளவில், 1960களில் 85 ஆயிரம் "டன்' வீரிய பொருள் பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு, தற்போது 35 ஆயிரம் "டன்'களாக குறைந் துள்ளது. தமிழகத்தில் 11 ஆயிரத்து 500 "டன்' அளவிலிருந்து 3,500 "டன்'களாக குறைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் கடைபிடிக்கப்படுவது.
தவிர, பி.டி., பருத்தியால் ரசாயன பூச்சிகளின் உபயோகம், ஒரு பருவத்தில் 10-15 முறையிலிருந்து ஒன்று அல்லது இரண்டு முறையாக குறைந்துள்ளது. வரும் ஜூன் மாதத்துக்குள் மாவுப்பூச்சியே இல் லாத நிலை ஏற்பட வேண்டும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ஜோனத்தான், வணிக மேம் பாட்டு மைய இயக்குனர் சிவசுப்ர மணியன், பூச்சியியல் துறைத்தலைவர் கருப்புசாமி, முனைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் உட்பட பலர் இதில் பங்கேற்றனர்.

**தேசிய மீன்வள மேம்பாட்டு திட்டத்தில் வீடூர் அணையில் மீன்கள் வளர்க்க ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2011,21:33 IST

விக்கிரவாண்டி : தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வளர்ச்சிக்காக வீடூர் அணையில் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்ச்சி நடந்தது. மயிலம் ஒன்றிய சேர்மன் மலர் மன்னன் தலைமை தாங்கினார். கலெக்டர் பழனிசாமி கலந்து கொண்டு தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வீடூர் அணையில் நீண்ட விரலளவு கொண்ட 15 ஆயிரம் மீன் குஞ்சுகளை தண்ணீரில் விட்டார். நீர் வள நிலவள திட்டத்தில் 5 உபவடிநில பகுதிகளில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களான கண்ணாடி நாரிழை பரிசல்கள் மற்றும் வலைகளை 11 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 150 மீனவ பயனாளிகளுக்கு வழங்கி கலெக்டர் பழனிசாமி பேசியதாவது: தேசிய மீன் வள மேம்பாட்டு திட்டத்தில் வீடூர் அணையில் நீண்ட விரலளவு கொண்ட மீன் குஞ்சுகள் 15 ஆயிரம் தண்ணீரில் விடப்பட்டது.ஏற்கனவே 3 லட்சத்து 36 ஆயிரத்து 600 மீன் குஞ்சுகள் தண்ணீரில் வளர்க்க விடப்பட்டுள்ளது. உள்நாட்டு மீனவர்கள் இந்த மீன்களை பிடித்து தங்களது வாழ்கையின் தரத்தை உயர்த்திக் கொண்டும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டும். இவ்வாறு கலெக்டர் பழனிசாமி கூறினார். நிகழ்ச்சியில் உள் நாட்டு மீன்வள உதவி இயக்குனர் சீனுவாசன்,ஆய்வாளர்கள் செல்வராஜ், கந்தசாமி, இளங்கோ, முத்துகுமார், வீடூர் அணை உதவி பொறியாளர் அன்பரசன், வேளாண்மை அலுவலர் கதிரேசன், வி.ஏ.ஓ.,சிவசங்கரன், உதவியாளர் கருணாநிதி, உதயகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி

**நடப்பு நிதி ஆண்டில், மத்திய அரசின் உணவு மானிய சுமை 27% உயர்ந்து ரூ.74,231 கோடியாக அதிகரிக்கும்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டில், மத்திய அரசின் உணவு மானிய சுமை 27 சதவீதம் உயர்ந்து ரூ.74,231 கோடியாக அதிகரிக்கும் என மக்களவையில் தெரிவிக்கப்பட்டது. உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரித்தது, அதிக கொள்முதல் மற்றும் நியாய விலைக் கடைகளில் அதிக விநியோகம் போன்றவற்றால் மானியச் சுமை அதிகரிக்க உள்ளதாக மத்திய அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்தார்.

சென்ற நிதி ஆண்டில்...

சென்ற நிதி ஆண்டில், மத்திய அரசின் உணவு மானியச் சுமை ரூ.58,242.45 கோடியாக இருந்தது. இந்நிலையில் நடப்பு நிதி ஆண்டில் இதற்காக பட்ஜெட்டில் ரூ.59,354.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதற்கு மேல் கூடுதலாக ரூ.14,877.63 கோடி தேவைப்படும் என தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. உணவு தானியங்களுக்கான கொள்முதல் விலை அவ்வப்போது அதிகரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ரேஷன் கடைகளில் அரிசி மற்றும் கோதுமையின் விலை கடந்த 2002–ஆம் ஆண்டிலிருந்து எந்தவித மாற்றமும் இல்லாமலேயே உள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள 6.52 கோடி குடும்பங்களுக்கு

*மாதந்தோறும் 35 கிலோ அரிசி அல்லது கோதுமை மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.*

*உணவு தானியங்கள் கையிருப்பை பொறுத்து, வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ள 11.50 கோடி குடும்பங்களுக்கும் மானிய விலையில் அரிசி, கோதுமை வழங்கப்படுகிறது.*

*நெல் கொள்முதல்*

*நடப்பு 2010–11 கரீஃப் சந்தைப்படுத்துதல் பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) இதுவரையிலான காலத்தில் (சுமார் ஐந்து மாதங்கள்), பல்வேறு அமைப்புகள் வாயிலாக மத்திய அரசு கொள்முதல் செய்துள்ள நெல் 2.13 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பு பருவத்தில் நெல் கொள்முதல் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை காட்டிலும் 10 லட்சம் டன் அதிகரித்து 3.20 கோடி டன்னாக உயரும் என்று இந்திய உணவு கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் சிராஜ் ஹூசைன் தெரிவித்துள்ளார். சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் கொள்முதல் அளவு 3.15 கோடி டன்னாக இருந்தது.*